செ.வெ.எண்: 557/2016 நாள்: 22.08.2016

# பத்திரிகைச்செய்தி

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், சிறமடம் வருவாய் கிராமத்திற்குட்பட்ட, ஞாலம் ஊராட்சி பகுதிக்கு மட்டும், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் சிறப்பு மனுநீதித்திட்ட முகாம் நடைபெறுவது தொடர்பாக, மனுக்கள் பெறும் முதற்கட்ட நிகழ்ச்சி ஞானய்யாபுரம் அரசு துவக்கப்பள்ளியில் வைத்து 24.08.2016 (புதன் கிழமை) அன்று காலை 10.30 மணி முதல் மதியம் 1.00 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பொதுமக்களிடமிருந்து கன்னியாகுமரி மாவட்ட சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியரால் மனுக்கள் பெறப்பட்டு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே ஞாலம் ஊராட்சிக்குட்பட்ட பொது மக்கள் அனைவரும் இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.